பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை
ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව
**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

187,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
187,ආඩියපාදම්පාර, තිරුනෙල්වෙලි, යාපනය.
187,Adiyapatham Road, Thirunelvely, Jaffna.

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com

My No: NP/09/FRM/CIR/2015

24.03.2015

மாகாண நிதிச் சுற்றுநிருபக்கடித இல:- PF/CL/03/2015

மாகாணச் செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

<u>மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக்கொடை, பிரமாண அடிப்படையிலான கொடை மற்றும் வெளிநாட்டுத் திட்டங்களின் கீழ் வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்போது பின்பற்றப்படவேண்டிய விதிமுறைகள்</u>

மேற்படி விடயம் தொடர்பான செயலாளர், நிதி ஆணைக்குழு அவர்களின் PC/3/3/2015ம் இலக்கமும் 2015.02.06ம் திகதியும் கொண்ட கடிதத்தின் தமிழாக்கம் தாங்களின் உரிய நடவடிக்கைக்காக இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது.

அ.பத்திநாதன்
பிரதம செயலாளர், வ.மா

பிரதிகள்:-

1. கௌரவ ஆளுநரின் செயலாளர் - வ.மா - கௌரவஆளுநர் அவர்களிற்கு அறியத்தருவதற்காக
2. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் - வ.மா

(2–3) தகவலுக்காக

பிரதி பிரதம செயலாளர் / නියෝජ්‍ය ප්‍රධාන ලේකම් / DEPUTY CHIEF SECRETARY

நிர்வாகம் / පරිපාලන / ADMINISTRATION — Tel : 021 222 0843 (Dir) : 021 222 0840 (Gen) Fax : 021 222 0841 e-mail : ppas.np@gmail.com

நிதி / මුදල් / FINANCE — Tel : 021 222 0850 (Dir) : 021 222 0854 (Gen) Fax : 021 222 0853 e-mail : nptreasury@gmail.com

திட்டமிடல் / සැලසුම්කරණ / PLANNING — Tel : 021 223 0355 (Dir) : 021 223 0451 (Gen) Fax : 021 223 0354 e-mail : npplan@sltnet.lk

ஆளணிப் பயிற்சி / පිරිස් හා පුහුණු / PERSONNEL TRAINING — Tel : 021 739 1250 (Dir) : 021 739 1254 (Gen) Fax : 021 739 1257 e-mail : npmdti@gmail.com

பிரதம உள்ளக கணக்காய்வாளர் / ප්‍රධාන අභ්‍යන්තර විගණක / CHIEF INTERNAL AUDITOR — Tel : 021 222 0796 (Dir) : 021 222 9528 (Gen) Fax : 021 222 0796 e-mail : npcaudit@yahoo.com

Chairman: (+94) 011 2556840
Secretary: (+94) 011 2556831
Office: (+94) 011 2556834, 011 3071324
Fax: (+94) 011 2556836, 011 2556837
Email: fincom@sltnet.lk

මුදල් කොමිෂන් සභාව
(ආණ්ඩුක්‍රම ව්‍යවස්ථාවේ 154'ඊ ව්‍යවස්ථාව යටතේ පිහිටුවන ලදී.)
நிதி ஆணைக்குழு
(அரசியலமைப்பின் 154'ஈ உறுப்புரையின்கீழ் தாபிக்கப்பட்டது)
FINANCE COMMISSION
(Established under Article 154 R of the Constitution)

48, Vajira Road,
Colombo 04, Sri Lanka.

My No: FC/3/3/2015
Your No:
Date: 2015.02.06

CHIEF SECRETARY'S OFFICE
16 FEB 2015
NORTHERN PROVINCE

தமிழ் மொழியாக்கம்

பிரதம செயலாளர்,
மேல் / மத்திய/ தென் / வட / கிழக்கு/ வடமேல்/ வடமத்திய/ ஊவா/ சப்பிரகமுவ

அன்பான பிரதம செயலாளர் அவர்களே,

<u>மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்திக் கொடை, பிரமாண அளவை அடிப்படையாகக் கொண்ட கொடை மற்றும் வெளிநாட்டுத் திட்டங்களின் கீழ் வருடாந்த அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப் படுத்தும் போது பின் பற்றப்பட வேண்டிய விதிமுறைகள்</u>

மேற் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக என்னால் தங்களுக்கு அனுப்பி வைக்கப் பட்ட FC/3/3/2014 இலக்கமும் 2014.12.31 திகதியும் கொண்ட கடிதத்துக்கு மேலதிகமாக;

மாகாணங்களால் மேற் கொள்ளப்படும் நிர்மாண நடவடிக்கைகளுக்காக மூலதன ஒதுக்கீடுகளில் 5% வீதத்துக்கு உட்பட்டதாக நிர்வாகச் செலவுகளுக்காக நிதி ஒதுக்குவதற்காக வழங்கப்பட்ட அனுமதி, மேலேயுள்ள கடித மூலம் 2015-01-01 திகதி முதல் நடைமுறைப் படுத்தப் படும் வகையில் இரத்துச் செய்யப் பட்டுள்ளது.

எனது மேலேயுள்ள கடிதத்தில் தெளிவாக குறிப்பிடப் பட்டுள்ளபடி அரச துறைகளில் கணக்கு வைக்கும் நடைமுறைகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தரப்படுத்தலுக்கு அமைவாக மாகாண சபைகளும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியது அவசியமென்பதால் நிதி ஆணைக்குழுவால் இது போன்ற தீர்மானம் எடுக்கப் பட்டது. அது போல, கடந்த வருடங்களில்,மாகாணங்களால் நிர்வாகச் செலவுகளின் கீழ் ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் அதிக வீதத்தைப் பயன்படுத்தி கணினி, வீடியோ கமரா, மேசை கதிரை போன்ற பல்வேறு அலுவலக உபகரணங்கள் மற்றும் வாகனங்களுக்குத் தேவையான ரயர் போன்ற வற்றை விலைக்குக் கொள்வனவு செய்வதற்காக அனுப்பட்ட விண்ணப்பங்களையும் எளிதாகக் காட்ட முடியும். அது போல நிர்வாகச் செலவுகளுக்காக மூலதனச் செலவுகளின் கீழ் நிதி ஒதுக்குவது எதிர்பார்க்கும் பிரதான திட்டமிடல் கொள்கைக்கு புறம்பான நடவடிக்கை என்பது நிதி ஆணைக்குழுவின் நோக்கமாகும் மாகாணங்களால் நிச்சயிக்கப்பட்டபடி வருடாந்த வேலைகளை திட்டமிடுவதன் மூலம் இது போன்ற பொருட்கள் மற்றும் உபகரணங்கள் விலைக்கு பெற்றுக்கொள்ளும் போது தேவையான



DCS/Finance
Planning

A/O

18/02 2015 14:48 FAX 001

பகிர்வுகளை பொருத்தமான செலவு தலைப்புகளின் கீழ் உள்ளடக்குவது மிகப் பொருத்தமான நடவடிக்கையாகும்.

ஆனாலும், இது தொடர்பாக இப்போதும் சில மாகாணங்களால் நிதி ஆணைக்குழுவுக்கு அனுப்பப் பட்ட கடிதங்கள் நிர்வாகச் செலவுகளுக்கு ஒதுக்குவதை அப்படியே தொடர்ந்து கேட்பதாக உள்ளது. அது போல சில மாகாணங்களால் மீண்டு வரும் செலவுகளின் கீழ் நிர்வாகச் செலவுகள் ஒதுக்குவது 2016 ம் வருடம் முதல் நடைமுறைப் படுத்துவதற்கு சம்மதம் கேட்டிருக்கிறார்கள் ஆனால், அரச வர்த்தக திணைக்கள சுற்றறிக்கை இலக்கம் 03/2013 பிரகாரம், அரச நிறுவனம் 2014.01.01 திகதி முதல் இந்த கணக்கு வைப்பு தரப்படுத்தலுக்கு அமைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென காட்டப்பட்டுள்ளது. அது போல 2014.12.31 அன்று நடைபெற்ற நிதி ஆணைக்குழு கூட்டத்தில் மாகாண மூலதன ஒதுக்கீட்டில் நிர்வாகச் செலவுகளுக்காக நிதி ஒதுக்குதல் இரத்து செய்யப் பட்டது தொடர்பாக கொள்கைத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும், அரசால் எதிர்காலத்தில் மாகாணங்களில் எண்பாரலை ஆய்வுகள் தொடர்பாக விடயங்கள் பாராளுமன்ற கணக்காய்வு குழு மேற்பார்வைக்கு சமர்ப்பிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆகையால், சகல மாகாணங்களும் மேலேயுள்ள எனது கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள படி கணக்கு வைப்பு முறை தரப்படுத்தலுக்கு அமைவாக நடவடிக்கை எடுப்பதோடு, அந்தக் கடிதத்தில குறிப்பிடப் பட்ட விதிமுறைகளுகளுக்கு அமைவாக 2015-01-01 முதல் நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவிக்கின்றேன்.

2015 ம் வருடத்துக்காக இப்போது மாகாண செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு முடிவடைந்துள்ளதால் நிதி பிரமாணங்களின் படி தேவையான திருத்தங்களைச் செய்து, நிர்வாகச் செலவுகளுக்காக தேவையான ஒதுக்கீடுகளை மீள்வரும் செலவுகளின் கீழ் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளும்படி தெரிவிக்கின்றேன்

(கையொப்பம்) டபிள்யு.எச்.முனசிங்க
செயலாளர்
நிதி ஆணைக்குழு

பிரதிகள்:

1. பிரதி பிரதம செயலாளர், ( திட்டமிடல் )
2. பிரதி பிரதம செயலாளர், ( நிதி )
3. உதவி கணக்காய்வாளர் நாயகம்



19/02 2015 14:49 FAX ☎002